**இலங்கை மந்திரிகைக் கூட்டுத்தாபனம் - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புரைடய உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டுக்காக செலவின அட்டைகளின்றி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோரால் மரமுந்திரிகை விதைகளை திருப்பி அனுப்பலாக ரூபா 178,357 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | செலவின அட்டைகளை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படாத போதிலும், மரமுந்திரிகை விதைளை மீள அனுப்புதல் தொடர்பில் பொருள் பெறுவனவு ஏடுகளை சரியாக தயாரித்து அந்த மரமுந்திரிகை விதைகளை சரியாக பொறுப்பேற்று, மீள் | மீள அனுப்பல்கள் தொடர்பில் செலவினத் தாள்களை பேணுதல் மற்றும் அது தொடர்பில் உள்ளக கட்டுப்பாடொன்றி னை பேணுதல் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளகக் கட்டுப்பாட்டில் நிலவும் குறைபாடுகள் காரணமாக குறித்த மரமுந்திரிகை விதைகளை அனுப்பியமைக்கான காரணம் அல்லது கிடைத்த இருப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பிலான திட்டவட்டமான பதிலொன்று மற்றும் தெளிவான பதிலொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பல்களின் பெறுமதியை சரியாக கணிப்பிட்டு பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தி உரிய முறையில் செலவினத் தாள்களை தயாரித்து அந்த விதத்தில் மீள அனுப்பல்கள் கொடுக்கல் வாங்கல் புத்தகங்களுக்கு அறிக்கையிடப்படும். | வேண்டும். |
| (ஆ) | மரமுந்திரிகை தோல், மரமுந்திரிகை விதை மற்றும் மரமுந்திரிகை கன்றுகள் அலகுக் கிரயத்தினை கணிப்பீடு செய்யும் நடைமுறையொன்று தாபிக்கப்பட்டிராமை மற்றும் உற்பத்திக் கிரயத்தினை கணிப்பீடு செய்யும் போது நிலவும் குறைபாடுகள் காரணமாக ரூபா 32,455,294 கூட்டுப் பெறுமதியுடைய இறுதி இருப்பு பெறுமதி கணிப்பிடப்பட்ட விதத்தினை பரீட்சிக்க முடியாதிருந்தது. | மீளாய்வாண்டுக்குரியதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மரமுந்திரிகை தோல், மரமுந்திரிகை விதை மற்றும் மரமுந்திரிகை கன்றுகள் உள்ளபடியாக செலவிடப்பட்டுள்ள கிரயத்தின் அடிப்படையில் குறித்த இறுதி இருப்பு கணிப்பிடப்பட்டுள்ளதுடன், அதன் போது குறித்த இருப்புகளுக்குரிய குறித்த திகதியில் உள்ளபடியாக தேறிய தேறக்கூடிய பெறுமதி தொடர்பிலம் கவனம் செலுத்தி இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உற்பத்திக் கிரயத்தினை கணிப்பீடு செய்யும் போது முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை**

| | உரிய கணக்காய்வு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 38 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுகளுடன் முன்னைய வருடத்தின் ஒப்பீட்டு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்கு உரியதாக கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டு தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் 2018 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுகளில் தகவல்களை முன்வைப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால், உரிய வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, அந்தத் தேவையை சரியான முறையில் நிறைவேற்ற முடியவில்லை. எவ்வாறாயினும், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட 2020 ஆம் | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டின் நிதிக்கூற்றுகளுடன் ஒப்பீட்டுத் தகவல்களையும் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 139 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கமானது முறையான முதலீட்டு திட்டத்திற்கமைய முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கக் கணக்கின் ரூபா 35,045,966 ஆன மீதிக்கமைய எதுவித முதலீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியில் இருந்து கூட்டுத்தாபனத்திற்கு ஆண்டுதோறும் பெறப்படும் மீண்டெழும் மானியங்கள், ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்கேனும் போதுமானதாக இல்லாமையால், ஓய்வுதிய பணிக்கொடையை செலுத்துவதற்காக அந்த மீண்டெழும் மானியங்களை பயன்படுத்தும் இயலுமை இல்லாதிருந்தமையால், அதற்காக கூட்டுத்தாபனத்தின் ஈட்டத்தினை பயன்படுத்த நேர்ந்தது. இதன் விளைவாக, கூட்டுத்தாபன வருவாயில் இருந்து பிற அவசர மற்றும் அத்தியாவசிய செலவுகள் இருப்பதால், பணிக்கொடை செலுத்த தனி முதலீடு செய்ய வாய்ப்பில்லை.<br><br>எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை சாதகமான நிலையை அடையும் போது, இந்த முதலீட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கு முழு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கங்களுக்குரிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய ரூபா 186,453 ஆன அட்டுறு செலவினம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 570,734 ஆன செலவினம் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் அட்டுறு செலவினங்களாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்ட போதிலும், மேற்படி பெறுமதியில் ரூபா 384,281 தொகை 2019 ஆம் | மீளாய்வாண்டுக்குரிய அட்டுறு செலவினங்கள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டின் போது அட்டுறு செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இந்த 2 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 695,720 ஆன செலவினம் மோட்டார் வாகன கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு, குறித்த பெறுமதி பெறுமானத் தேய்வாக சீராக்கப்பட்ட காரணத்தால், மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 604,876 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகன பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 695,720 ஆன செலவினமானது குறித்த மோட்டார் வாகனங்களின் முழுமையான என்ஜின்களுக்கே என்பதுடன், இந்த பழுதுபார்த்தல் காரண்மாக அந்த மோட்டார் வாகனங்களின் பயன்படு ஆயுட்காலம் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கையான வருடங்களால் அதிகரித்துள்ளமையால் குறித்த செலவினத்தை இநவாவறு மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது மீண்டெழும் செலவினமொன்றாக கருதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | கணக்காண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு மெய்மையாய்விற்கமைய 2 மரமுந்திரிகை பதப்படுத்தும் நிலையங்களின் பதப்படுத்தப்பட்ட மரமுந்திரிகை இருப்பு 3078 கிலோ கிராம்களாக காணப்பட்ட போதிலும், பௌதீக இருப்பினை கருத்திற்கொள்ளாது இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத 839 கிலோ கிராம்கள் அளவான துண்டாக்கப்பட்ட மரமுந்திரிகையுடன் பௌதீக இருப்பு பெறுமதிகளுக்கு சமனற்ற பெறுமதிகளுடனான பட்டோலைகளின் பயன்பாட்டால், இறுதி இருப்பு கணிப்பீட்டினை மேற்கொண்ட காரணத்தால் இறுதி இருப்பு மற்றும் ஆண்டுக்கான இலாபம் ரூபா 1,557,247 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொருள் மெய்மையாய்வுச் சபையின் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் போது, தவறுதலாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு பௌதீக மரமுந்திரிகை விதையின் அளவுகள் மாறுபட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பதப்படுத்தும் நிலையங்களின் நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் முழுமையான பொறுப்புடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பௌதீக மரமுந்திரிகை விதை இருப்பினை கருத்திற்கொண்டு இறுதி மரமுந்திரிகை இருப்பின் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,557,247 இனால் இலாபத்தினை அதிகரித்து காண்பிக்க நேர்ந்தது. | பௌதீக பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் சரியாக தயாரிக்கப்பட்டு அதில் காண்பிக்கப்பட்டுள்ள இறுதி இருப்புகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்ட இறுதி இருப்பு கணிப்பிடப்பட்ட கிரய தகவல்களுக்கமைய மரமுந்திரிகை விற்பனை நிலையங்களில் நிலவிய ஆரம்ப இருப்பு, பதப்படுத்தும நிலையங்களிலிருந்து கிடைத்த இருப்பு, விற்பனை, இலவசமான விநியோகங்கள் ஆகியவற்றை கருத்திற்கொள்ளும் போது நிலவ வேண்டிய மற்றும் உள்ளபடியான இறுதி இருப்பு ஆகியவற்றுக்கிடையே 820.740 கிலோ கிராம்களி மரமுந்திரிகை இருப்பு பற்றாக்குறையொன்று அவதானிக்கப்படுவதுடன், அதன் பெறுமதி ரூபா 2,099,321 ஆகும். | இறுதி இருப்பிலான வேறுபாட்டினை கணிப்பிட்ட விதம் தொடர்பில் கருத்திற்கொள்ளும் போது, அந்த கணிப்பீட்டின் 2019.01.01 ஆந் திகதியில் உள்ளபடியான மரமுந்திரிகை விற்பனை நிலையங்களின் சரியான மரமுந்திரிகை விதை இருப்பானது 1303.900 கிலோ கிராம்களாக காணப்பட்டதுடன், அது விற்பனை பிரிவினால் மூல ஆவணங்களை உரிய முறையில் பயன்படுத்தாது தமது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை அளவாகும். அதற்கமைய குறித்த கணிப்பீட்டுக்கு சரியான விற்பனை அளவானது பதிலீடு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது.<br><br>மீளாய்வாண்டினுள், விற்பனை நிலைங்களிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட மரமுந்திரிகை விதை இருப்பின் அள்வானது 488.700 கிலோ கிராம்கள் ஆகும். அதற்கமைய நிலவ வேண்டிய மற்றும் உள்ளபடியான மரமுந்திரிகை விதை இருப்பு இருப்பின் அளவுகளிடையே காணப்படுவதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடு தொடர்பில் இணக்கப்பாடு தெரிவிக்க முடியாது. | நிதி மற்றும் விற்பனை பிரிவினால் பேணப்படும் ஆவணங்களை உரிய முறையில் பேணப்பட வேண்டியதுடன், மாதாந்தம் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | விற்பனை பிரிவின் பிரகாரம் அறிக்கை<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் | 82,767,073 | 79,425,899 | 3,341,174 | இவ்வாறான இத்தகைய | சந்தைப்படுத்தல் மற்றும் நிதிப் |

| | | |
|---|---|---|
| மரமுந்திரிக விற்பனை வருமானம் | பிரச்சனையான சூழ்நிலைகளைத் தவிர்க்கும் நோக்கில் துல்லியமான ஆதார ஆவணங்களைப் பயன்படுத்தி நிதிப் பிரிவின் தகவல்களுடன் ஒப்பிடும் வகையில், விற்பனை வருமானம் குறித்த துல்லியமான தகவல்களை அவர்களின் பதிவேட்டில் பதிவு செய்ய சந்தைப்படுத்தல் பிரிவு அலுவலர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | பிரிவுகளின் தகவல்களின் நம்பகத்தன்மைய உறுதிப்படுத்தும் நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

**1.5.5 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்) | இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் வியாபார மற்றும் சேவை நட்வடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச கூட்டுத்தாபனமொன்றான துடன், அந்த பிரதான சேவை நடவடிக்கைகளானது நாடளாவிய ரீதியில் முந்திரி சாகுபடியை அபிவிருத்தி செய்வதும் முந்திரி தொழில் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதும் முக்கிய பணியாகும். மொத்த ஊழியர்களின ஏறக்குறைய 60% இற்கு அண்மிய் பணியாளர்கள் மேற்கூறிய சேவைகளில் | கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக கருத்திற்கொள்ளக் கூடிய நட்டமொன்றை அறிக்கையிட்டிருந் தமையால் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| ஆண்டு | நட்டம் ரூபா | அரச மானியம் (மீண்டெழும்) ரூபா | அரச மானியம் (மூலதன) ரூபா | வருமானமாக இனங்காணப்பட்ட அரச மானியம் (மூலதன) ரூபா | அரச மானியங்களி நீங்கலாக நட்டம் ரூபா |
|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 1-2-4 |
| 2015 | (47,728,042) | 66,100,000 | 35,000,000 31,950,000 | 31,186,501 | (145,014,543) |
| 2016 | (36,525,411) | 48,000,000 | 40,000,000 | 31,181,987 | (115,707,398) |
| 2017 | (42,335,722) | 54,000,000 | 54,000,000 | 34,025,205 | (130,360,927) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2018** | **(39,642,728)** | **50,000,000** | **66,520,000** | **35,263,122** | **(124,905,850)** |
| **2019** | **(30,185,251)** | **60,000,000** | **70,000,000** | **44,615,174** | **(134,800,425)** |

கடந்த 05 வருட காலப்பகுதியினுள் அதாவது, 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கூட்டுத்தாபனம் பின்வருமாறு தொடர்ச்சியாக கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான நட்டமொன்றினை அறிக்கையிட்டிருந்தது. வரிசை அமைச்சினால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படும் மானியங்கள் அகற்றப்பட்டு கருத்திற்கொள்ளப்பட்டால் கடந்த 05 வருடங்களினுள் கூட்டுத்தாபனம் ரூபா 115 மில்லியனிலிருந்து ரூபா 145 வரையான வீச்சில் மிகவும் பாரிய நட்டமொன்றுடன் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தொடரந்தியங்கும் நிலைமையானது சவாலுக்குரியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

ஈடுபடுகின்றனர் மற்றும் அவர்களின் சேவைகளிலிருந்து பெறப்படும் பொருளாதார நன்மைகள் நிதி ரீதியாக மதிப்பிடப்படவில்லை மற்றும் கணக்கில் கொண்டு வரப்படவில்லை.

அவ்வாறே, வருடாந்தம் அரசின் திறைசேரியிலிருந்து அந்த கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் பெறப்படும் மீண்டெழும் மானியங்களில் சுமார் 85% - 90%, அந்தச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்காகச் செலவிடப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த விடயங்களில் கவனம் செலுத்தாமல் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பகுப்பாய்வை முன்வைப்பதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையை விளக்குவது நடைமுறைச் சாத்தியமற்றது.

### 1.5.6 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | மேலதிக நேர படிகள், கூட்டிணைந்த படிகள் மற்றும் வாகன பழுதுபார்த்தல்கள் உள்ளடங்களாக செலுத்த வேண்டிய செலவினம் | 111,177 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுகள், பற்றுச்சீட்டுகள் | செலுத்த வேண்டிய ரூபா 111,177 ஆன பெறுமதி மீள செலுத்தப்படாமையால், அந்த பெறுமதி முன்னைய வருட சீராக்கமொன்று மேற்கொள்ளப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடப்பாண்டின் போது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய செலவினங்களுக்கு உரிய எழுத்துமூல சான்றுகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த 6 வருட காலமாக ஏனைய செலுத்த வேண்டிய செலவினங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிவாரண கொடுப்பனவுகள் மற்றும் பயிர் காப்பீடு செலுத்தல் | 3,602,678 | பற்றுச்சீட்டுகள் | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்களுக்கு உரிய எழுத்துமூல சான்றுகள் பேணப்பட வேண்டியதுடன், அவற்றை கணக்காய்வுக்கும் சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நானாவித கடன் பட்டோரின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு மரமுந்திரிகை கன்றுகளை வழங்குவதற்காக பெற வேண்டியதாக கணக்கு வைக்கப்பட்டுள்ள 07 வருடங்களை விட பழமையான ரூபா | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய கடன் | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| 9,466,200 தொகை குறித்த அமைச்சில் தற்போது காணப்படாமையால் அறவிட முடியாதுள்ளதாக அவதானிக்கப்படுகின்ற போதிலும், மேற்படி கடன் மீதிகளுக்காக அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியை அறவிடுவதற்காக கருத்திற் கொள்ளவேண்டிய காலமாக முயற்சி செய்திருந்த போதிலும், அந்த முயற்சி இதுவரையிலும் தோல்வியடைந்துள்ளது. எவ்வாறான போதிலும், வரைபு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்திற்கொண்டு நடப்பாண்டு முதல் இதுவரையிலும் அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு (அழிவு நட்டம்) மேற்கொள்ள உள்ள இயலுமை தொடர்பில் ஆராய்ந்து அதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வேண்டியதுடன், அந்த அறவீடுகள் காலம் கடந்தமையால் அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 7,555,988 ஆன அட்டுறு செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 817,934 ஆன அட்டுறு செலவினம் 2022 நவம்பர் 24 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 7,555,988 ஆன அட்டுறு செலவினத்தில் 89% இற்கு அதிகமான பகுதியை இதுவரையிலும் தீர்ப்பனவு செய்துள்ளதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 817,934 ஆன அட்டுறு செலவினத்தை தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் தாமதம் ஏற்பட்டமைக்கு கூட்டுத்தாபனத்தின் நிதி இடர்கள் காரணமான அமைந்திருந்தது. | அட்டுறு செலவினங்களை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2011 ஆம் ஆண்டு முதல் வருமான வரி செலுத்தல் மற்றும் வரி அறிக்கைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத போதிலும், அந்த காலப்பகுதிக்குரிய ரூபா 779,483 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட வரி (WHT) பெற வேண்டிய மீதிகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமான வரி செலுத்துதல் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரி தொடர்பில் சரியான சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு | பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் முப்பது நாட்களினுள் கணக்காய்வு கட்டணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2005 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் ரூபா 2,552,208 தொகை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கணக்காய்வு கட்டணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க தொழிலாளர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய | கணக்காண்டுக்குரிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணம் உரிய திகதியில் செலுத்தப்படாமை | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணம் உரிய முறையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரச்சட்டம். | மற்றும் சீ அறிக்கை உரிய முறையில் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 24,427 ஆன தொகை மிகைக் கட்டணமாக செலுத்த நேர்ந்திருந்தது. | | செலுத்தப்பட வேண்டியதுடன், மிகைக் கட்டணங்கள் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்க ளிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கட்டுப்பாட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 02 வருடங்கள் 08 மாத தாமதத்தின் பின்னர் 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி 2019 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2012 யூலை 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுவின் தீர்மானம் | கூட்டுத்தாபனத்தின் சட்டரீதியான உரித்தற்ற காணிகளின் சட்டரீதியான உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பொது முயற்சிகள் குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலகம் மற்றும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்டுள்ள மரமுந்திரிகை பயிரிடப்படும் காணிகள் சுமார் 11,239 ஏக்கரின் | இந்த காணிகளின் உரித்தினை சுவீகரிக்கும் பணிகள் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் இணைந்ததாக தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லப்படுவதுடன், அந்த செயன்முறையை நிறைவு செய்வதற்காக அதிக காலம் எடுக்கப்பட்டிருந்தது. | உரிய கணக்குகள் குழு தீர்மானத்திற்கமைய கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரித்தற்ற காணிகளின் உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சட்டரீதியான உரித்தினை கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அரச மூலதன மானியமாக ரூபா 70,000,000 கூட்டுத்தாபனத்திற்க காசாக கிடைத்திருந்ததுடன், அவற்றுள் ரூபா 10,301,285 மாத்திரம் மரமுந்திரிகை மற்றும் தென்னை பயிர்ச்செய்கையின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அரச மூலதன மானியங்களில் மூலதனமாக்கப்பட்ட பெறுமதியின் இரு மடங்கினை விட அதிக அளவான ரூபா 25,839,693 தொகை மீண்டெழும் செலவினங்களாக செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய எஞ்சிய தொகை ரூபா 33,859,022 ஆனஅ தொகை மூலதன மானிய வைப்புக் கணக்கினுள் எஞ்சியிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக அந்த கணக்கின் மீதி ரூபா 504,140 என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய மூலதன மானியங்கள் வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் மூலதன மானியங்கள் அந்த நோக்கங்களுக்காக ஈடுபடுத்த மற்றும் மூலதனமாக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 30,185,251 ஆன நட்டமாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 39,642,728 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 9,457,477 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நட்டத்திலான குறைவிற்கு மீண்டெழும் அரச மானியங்களின் அதிகரிப்பு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது புத்தளம் மற்றும் கமன்தளுவ ஆராய்ச்சி நிலையங்களுக்காக மூலதன மானியத்தின் கீழ் ரூபா 3,214,226 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் புதிய ஆராய்ச்சிகள் எவையும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன், இரண்டு நிலையங்களினதும் கடந்த வருடங்கள் முதலாக முன்கொண்டுவரப்பட்டிருந்த 08 ஆராய்ச்சிகள் மாத்திரம் இடம்பெற்றவாறு காணப்பட்டது. மேலும், ஆராய்ச்சிகளின் செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் தொடர்ச்சியான மற்றும் முறையான செயன்முன்னேற்ற அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | மரமுந்திரிகை என்பது பல் வருடப் பயிர் என்பதால் அந்த பயிருடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படும் அனைத்து ஆராய்ச்சிப் பணிகளின் இறுதிப் பெறுபேற்றினை பெற்றுக்கொள்வதற்கு உரிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பல வருடங்களாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் செயன்முன்னேற்றம் தொடர்பில் மாதாந்தம் தலைமை அலுவலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் செயன்முன்னேற்ற அறிக்கையொன்று பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக மும்மாத அடிப்படையில் வயம்ப பல்கலைக்கழகத்தின் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தின் பேராசிரியர் ஒருவரின் தலைமையில் நடாத்தப்படும் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களிலும் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் தொடர்பில் மற்றும் அவற்றில் இடம்பெறக்கூடிய திருத்தங்கள் மற்றும் நாளதுவரையாக்கல் தொடர்பில் விடயங்கள் கலந்துரையாடப்படும். | புதிய ஆராய்ச்சிகளை ஆரம்பித்தல், ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிகளை துரிதமாக முடிவுறுத்தல் மற்றும் ஆராய்ச்சி செயன்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வததற்கு அயலுமான வகையில் அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | மரமுந்திரிகை கன்று உற்பத்தி நடைமுறையை உரிய முறையில் கண்காணிக்க முடியாமை மற்றும் பராமரிக்க முடியாமை காரணமாக முறையே ரூபா 49.45 மற்றும் ரூபா 36.23 ஆன கிரயத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட பதியம் வைக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 24,159 மற்றம் விதைக் கன்றுகள் 9,831 எண்ணிக்கையை இறந்த கன்றுகளாக அகற்ற நேர்ந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,550,840 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | நியமங்களுமைக்கமைய வணிக மரமுந்திரிகை நாற்று மேடைகளில் பதியம் வைக்கப்பட்ட கன்றுகளை உற்பத்தி செய்யும் போது பதியம் தோல்வியுறுவதற்காக இடமளிக்கும் உச்ச வீதம் 20% ஆகும். மீளாய்வாண்டினுள் உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த பதியம் வைக்கப்பட்ட மரமுந்திரிகை கன்றுகளின் எண்ணிக்கை 304,317 ஆவதுடன், பதியம் வைக்கப்பட்ட கன்றுகளின் தோல்வியடைந்த கன்றுகளின் எண்ணிக்கை 24,159 ஆகும். அந்த அளவானது 8% | மரமுந்திரிகை கன்று உற்பத்தி நடைமுறையை உரிய முறையில் கண்காணித்தல் மற்றும் பராமரிக்கப்பட வேண்டும். |

இற்கு அண்மிய இடமளிக்கக்கூடிய சதவீதம் ஆகும். அந்த சராசரி இழப்பினை உள்ளடக்கும் வகையில் பதியம் வைக்கப்பட்ட கன்றுகளின் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, விதை மரமுந்திரிகை கன்றுகளின் உற்பத்தியின் போது இறப்பிற்காக உச்ச சதவீதம் 5% ஆகும். மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த விதை கன்றுகளின் எண்ணிக்கை 136,409 ஆன எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறந்த கன்றுகளின் எண்ணிக்கை 9,831 அளவானது 7% இற்கு அண்மிய வீதத்தினை கொண்டிருந்தது. அதற்கமைய இடமளிக்க முடியாத விதைக் கன்றுகளின் அறப்பு சுமார் 2% ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் உற்பத்திக் கிரயத்தினை கருத்திற்கொள்ளும் போது அந்த அசாதாரணமான இழப்பின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் அண்ணளவாக ரூபா 109,072 ஆகும்.

(இ) தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான ஓயாமடுவ பண்ணையில் இருந்து மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட 250 ஏக்கர் பகுதி தேசிய கால்நடை சபைக்கு மீளவும் சுவீகரிக்கப்பட்டு, மார்ட்டின் ஐபில் ஐபில் பண்ணையில் இருந்த 441 ஏக்கர் எழுவன்குளம் காணி 2019 ஆகஸ்ட் 01 அன்று இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) எழுவன்குளத்தில் அமைந்துள்ள மார்டின் இபில் இபில் பண்ணையுடனான காணி இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீண்ட கால குத்தகை உடன்படிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் வனாதவில்லு பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளதுடன், அந்த காணித் துண்டுக்காக குத்தகை அங்கீகாரம் கிடைக்கும் வரையிலும் காணியில் எந்தவொரு அபிவிருத்தியையும் மேற்கொள்ளாதிருக்குமாறு WAN/LND/01/LTLES/(3) 24 ஆம் இலக்க 2019 நவம்பர் 29 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 50 ஏக்கர்கள் பரப்பளவான காணித் துண்டு சுத்திகரிக்கப்படல் மற்றும் தளத் தயாரிப்பு ஆகியவற்றுக்காக ரூபா 785,000 ஆன பெறுமதிக்கு ஒப்பந்ததாரர் ஒருவருடன் 2019 ஆகஸ்ட் 09 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சுமார் 08 ஏக்கர்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. | | கைச்சாத்திடப்பட வேண்டும். |
| (ii) | 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து ஓயாமடுவ தாவர உற்பத்தி பூங்காவை அமைப்பதற்காக ஓயாமடுவ பிரதேசத்தில் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு 100 ஏக்கர் காணி வழங்கப்பட்டதுடன், பின்னர் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது மேலும் 150 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி காணியினுள் தென்னை பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கும் மேற்படி காணியில் கட்டிடம் கட்டுவதற்கும் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் ரூபா 14,480,914 செலவிட்டிருந்தது. பின்னர் வனாத்தவில்லுவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட எழுவன்குளம் | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பயிர்ச்செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் முதலீடு ஆவதுடன், அந்த செலவினத்தில் நலன்களை பெற்றுக்கொள்ள இயலுமான வகையில் முதலீட்டுக்கு முன்னர் இணக்கப்பாட்டினை ஏற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மார்ட்டின் இபில் இபில் பண்ணையில் 441 ஏக்கர் காணியை முந்திரி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியதாலும், ஓயமடுவ முந்திரி மற்றும் தென்னை அபிவிருத்தி செய்யப்பட்ட காணியை தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு வழங்கியதாலும் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட செலவு சிக்கனமற்ற செலவினமாகியிருந்தது. | | |
| (iii) | 2019 ஆம் ஆண்டு ஓயாமடுவ தோட்டத்தில் பெறப்பட்ட முந்திரி அறுவடை 1344.5 கிலோவாக இருந்தது, எழுவன்குளத்தில் காணி பரிமாற்றத்துடன், ஓயமடுவ தோட்டத்தில் இருந்து பெற வேண்டிய முந்திரி அறுவடையை கூட்டுத்தாபனம் இழந்துள்ளது. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பயிர்ச்செய்கைக்காக மேற்கொள்ளப்படும் செலவினம் முதலீடாவதுடன், அந்த செலவினத்தில் நலன்களை பெற்றுக்கொள்ள இயலுமான வகையில் முதலீட்டுக்கு முன்னர் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தில் எழுவன்குளம் மரமுந்திரிகைக் கள்று பூங்காவின் அருகில் புதிய முந்திரி வகைகளை வெளியிடுவதற்கும் ஒப்பீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் மாற்றப்பட்ட எழுவன்குளம் காணியின் II ஆம் கட்டமாக 2019 இல் ரூபா 6.7 மில்லியன் மூலதனத் தொகையைப் பயன்படுத்தி 50 ஏக்கர் மரமுந்திரிச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியிருந்த போதிலும், அந்த இலக்கு அடையப்படவில்லை. | புதிய முந்திரி பயிர்ச்செய்கையின் மூலம் மாநகராட்சிக்கு விரைவான பலன்களை பெறும் நோக்கில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி எழுவன்குளத்திலுள்ள மார்டின் ஐபில் ஐபில் பண்ணையின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரை, 35 ஏக்கர் நிலத்தில் புதிய முந்திரி பயிர்ச்செய்கை பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. | அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |